FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
# Term Examination, November - 2017

| தரம் :- 12 (2019) | புள்ளித்திட்டம் | தமிழ் |
|---|---|---|

(1) அ. தோழி, இரவு தோறும் விளங்கிய அலைகளால் மோதப்பட்ட தாழையின் வெண்மையான பூக்கள் வெண்மையான நாரையைப் போன்று மலர்ந்து காணப்படுகின்ற பெரிய துறைகளையும் பெரிய நீர்ப்பரப்பினையுமுடைய நெய்தல் நிலத்தலைவனோடு சிரித்துப் பேசி மகிழ்வதற்கு முன்பு, தாமரை மலரையொத்த கண்களும், மூங்கிலைப் போன்ற வெற்றியை உடைய அழகைப் பெற்ற தோள்களும் பிறையென்று எண்ணும் படியாகவுள்ள அறிவை மயங்கச் செய்யும் நெற்றியும் மிகவும் நல்லனவாக இருந்தன. அந்நிலை இப்பொழுது கழிந்து விட்டது.

(03 புள்ளிகள்)

ஆ) ‘பெருந்துறை விரிநீர்’ என்ற அடிகளினூடாக அகன்ற, பெரிய நெய்தல் நிலப் பரப்பும் நீர்வளச் சிறப்பும் எடுத்துக் காட்டப்படுகிறது.

* ‘திரை பொருத’ என்பதனூடாக எந்நேரமும் அலைகள் மோதிக்கொண்டிருக்கின்ற நீர் நிறைந்த கடற்பரப்பு என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.
* ‘தாழை வெண்பூ குருகென மலரும்’ என்பதனூடாக தாழை மரங்கள் வெள்ளை நாரை போன்று வெண்மையாக மலர்ந்துள்ளன என்று நெய்தல் நில அழகும் வளமும் எடுத்துக் காட்டப்படுகிறது.

(03 புள்ளிகள்)

இ) அகப்பண்பு
பிரிதல் ஒழுக்கம்
நெய்தல் நிலம்
துறை – ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்தது.

(03 புள்ளிகள்)

(2) அ) தனது பெரிய சேனைகள் ஒன்றாகத் திரண்டு தன்னைச் சூழ்ந்து வர, குகன் கங்கையின் தென்கரையை வந்தடைந்த சந்தர்ப்பத்தில் இடம் பெற்றது. (03 புள்ளிகள்)

ஆ) உவமையணி
உவமானம் - இடி முழக்கத்துடன் கூடிய பெரிய மேகங்களும் பெரிய கடல்களும் மிகுதியாக ஒலியெழுப்புதல்.
உவமேயம் - குகனது அளவற்ற படைகள் மிகுதியான ஆரவாரத்துடன் ஒலியெழுப்புதல்.
பொதுத்தன்மை – மிகுதியாக ஒழுயெழுப்புதல் (03 புள்ளிகள்)

இ) ஒன்றாகக் கூடி நிற்கின்ற பெரிய படை.
மிகுந்த ஆரவாரத்துடன் ஒலியெழுப்புகின்ற படை.
இடி முழக்கத்துடன் கூடிய பெரிய மேகங்களும் பெரிய கடல்களும் போலப் பேரொலி எழுப்புகின்ற அளவற்ற படை. (04 புள்ளிகள்)

agaram.lk

02. அ) 1. 3    2. 5    3. 4    4. 2    5. 2
6. 2    7. 5    8. 4    9. 4    10. 5    (10x1=10 புள்ளிகள்)

ஆ) 1. அ,இ,உ என்னும் மூன்றும் சுட்டுப் பொருளில் வரும் போது சுட்டெழுத்துக்களாகும்.
உதாரணம்:- அவன், இது, உவ்வீடு

2. சொற்களினிடையே வெவ்வேறு மெய்யெழுத்துக்கள் இணைந்து வருவது.
உதாரணம்:- அன்பு – அ(ன்ப்)பு, வாழ்வு – (வா(ழ்வ்)உ

3. பகுக்கக்கூடிய பதங்கள் பகுபதங்கள் எனப்படும். – அதன் உறுப்புக்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறுவகைப்படும்.

4. தமக்குரிய மாத்திரையினின்றும் நீண்டு ஒலித்தல் அளபெடை எனப்படும். இது உயிரளபெடை, ஒற்றளபெடை என இருவகைப்படும்

5. க் ச் ட் த் ப் ற். இன எழுத்துக்கள் முறையே ங், ஞ், ண், ந், ம், ன்

(5x2=10 புள்ளிகள்)

03. அ) 1. சமயம் என்பதற்கான விளக்கம்
2. மனித வாழ்விற்கும் சமயத்திற்கும் இடையிலான தொடர்பு.
3. மனித வாழ்வில் சமயத்தில் அவசியமும் செல்வாக்கும்.
4. சமயம் கூறும் வாழ்வியல் முறைகள்.
5. சமய நல்லிணக்கம் பேணப்படுவதன் மூலம் மனித வாழ்வில் மேம்பாடு.

ஆ) 1. இலக்கியம், பண்பாடு என்பவற்றுக்கான விளக்கம்.
2. இலக்கியங்களினூடகப் பண்பாடு கட்டியெழுப்படுதல்.
3. பழைய இலக்கியங்கள் அன்றைய மக்களின் வாழ்வியற் கோலங்களை எடுத்துக் காட்டுவதனூடாக இன்றைய மக்களின் வாழ்வைச் செம்மைப் படுத்துகின்றன.
4. பண்பாடுகளினூடாக இலக்கியங்கள் தோன்றுதல்.
5. புலம்பெயர் மக்களின் வாழ்வியற் கோலங்களை, பண்பாடுகளை புலம் பெயர் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.
6. ஆகவே இலக்கியமும் பண்பாடும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது.

இ) 1. ஊடகங்கள், அவற்றின் வகைகள் பற்றிய விளக்கம்.
2. ஊடகங்களின் பயன்பாடுகள் - தகவல் பரப்புதல், சமூக அபிப்பிராயத்தை உருவாக்குதல், பொழுது போக்கு.
3. இன்றைய நிலையில் ஊடகங்கள்.
- சமூகத்தைத் தவறாக வழி நடாத்தும் நிகழ்ச்சிகள்.
- வணிக நோக்கு
- அறிவைப்ப பரப்புவதைக் காட்டிலும் அதிக கவர்ச்சியும் கிளர்ச்சியும் ஊட்டுவதில் நாட்டம்
- தவறான / செம்மையற்ற மொழியாளுகை.
4. ஊடகங்களின் பொறுப்புணர்வு
- சமூகத்துக்குப் பயனுள்ள நிகழ்வுகள்
- பொறுப்புணர்வு
- ஜனநாயகப் பண்புகள், தலைமைத்துவப் பண்புகள், புத்தாக்கங்களை உருவாக்குதல்
- செம்மையான மொழிநடை.

agaram.lk

ஈ) 1. முகவுரை

2. தொடருரை

❖ நாவலர் கல்வி மரபுக்கும் பல்கலைக்கழகக்கல்வி மரபுக்கும் பாலமாய் அமைத்தவர்.

❖ தமிழ் இலக்கிய வரலாறு – நவீன தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு முன்னோடி.

❖ தமிழ் உரை நடை வரலாறு.

❖ திறனாய்வுப் பணிகள்

❖ சொல்லும் பொருளும், பாட்டும் ஓசையும் வழக்கும் செய்யுளும், கடலோசை என்னும் நூல்களின் ஆசிரியர்.

3. முடிவுரை

❖ தொடருக்கான விளக்கம்

❖ புறநானூற்று அடி

❖ இதே கருத்தைப் புலப்படுத்தும் ஆன்றோர் வாக்கு.

❖ பண்டைய தமிழர் வாழ்வியல் அம்சங்களுடன் பின்னிப் பிணைந்து காணப்பட்டது.

❖ இன்றைய மக்களின் மனப்பாங்கும் நடைமுறை வாழ்வும், சிக்கல்களும்

❖ யாதும் யாவரும் கேளிர் என்ற இலக்கை அடைவதற்கான முயற்சிகள்.

| புள்ளித்திட்டம் | | |
|---|---|---|
| பொருட் பொருத்தம் | - | 08 |
| மொழிச் செம்மை | - | 06 |
| பந்தி, குறியீடு | - | 04 |
| முழுமை | - | 02 |

## பகுதி – II

agaram.lk

4. அ) அறத்தினது நுட்பங்களை நூல்களைக் கற்றும், உய்த்துணர்ந்தும் கொள்பவாய் இருத்தல் வேண்டும்.

* அறிவாலும், சீலத்தாலும், காலத்தாலும் முதிர்ந்தவராய் இருத்தல் வேண்டும்.

* தெய்வத்தாலும், மக்களாலும் வந்த சன்பங்களை நீக்கி, அத்துன்பம் வராமல் காக்க வல்லவராய் இருத்தல் வேண்டும். 04 புள்ளிகள்

ஆ) அரசன் பெறத்தக்க பேறுகள் எல்லாவற்றிலும் சிறந்தது.

* அரசனுக்குரிய பொருள், படை, அரண் ஆகிய வல்லமை எல்லாவற்றுள்ளும் சிறந்தது.

* அமைச்சரை (பெரியாரை)க் கொண்டு ஆட்சி நடாத்துதல்.

06 புள்ளிகள்

இ) பகைவர்களால் துன்பம் ஏதுமில்லை.

* அரசரைக் கெடுக்கும் ஆற்றலுடைய பகைவர் யாருமில்லை.

04 புள்ளிகள்

ஈ) கெடுக்கம் பகைவர் இல்லாவிட்டாலும் தானே கெடுவான்.

* நிலைபேறு இன்மை.

* பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைச் சம்பாதிப்பதை விடப் பத்துமடங்கு தீமையானது. 06 புள்ளிகள்

05. அ) கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணலோடு உடற்றவே கொலாம். இப்படை எடுத்தது என்று குகன் ஐயுற்றான். 05 புள்ளிகள்

ஆ) கட்டிய உடைவாளையுடையவன்.

* கடித்த உதட்டையுடையவன்
* கடித்து பேசுகின்ற சொற்களையுடையவன்.
* தீப்பொறி பறக்கின்ற கண்களை உடையவன்
* பரதசேனை எலியாகும். நான் இவற்றை அழிக்கின்ற பாம்பாவேன் என்று வீரவசனம் பேசியவன். 09 புள்ளிகள்

இ)

- ஒன்றாகக் கூடிநின்ற பெரிய சேனை
- மிகப்பெரிய ஆரவாரத்துடன் ஒலியெழுப்பகின்ற படை.
- இடியையுடைய பெரிய மேகங்களும் பெரிய கடல்களும் மிகுதியாக எழுந்தாற்போலக் காணப்படுகின்ற படை. 06 புள்ளிகள்

06. அ) தவைனது செயலை யானையின் செயலுக்கு உவமித்து, குறிப்பின் மூலம் அவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துதல்.

* நன்றி மறந்தவரது செயற்பாட்டை எடுத்துக்கூறி, தலைவனது தற்போதைய நிலையை எடுத்துக்காட்டல்.
* இவற்றின் கூலம் தலைவனது கடமையையும் பொறுப்பையும் எடுத்து விளக்குதல்.

10 புள்ளிகள்

ஆ) "நெறியின் நீங்கியோர் நீர் மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை யுழந்து
சிறுமையுற்றேன்" என்று தன் மீது தானே இரக்கப்படுகிறான். கண்ணகி மீது மிகுந்த அனுதாபமும் அளவற்ற அன்பும் கொண்டவனாகக் காணப்படுகின்றான்.

10 புள்ளிகள்

இ) ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்ப வடிவினன்

- முடிவிலா முதலாய் விளங்குபவன்
- எங்கும் நிறைந்த ஐம்பூதங்களாகவும் அவையல்லாதும் கரந்து நிற்பவன்.
- ஒன்றென்று சொல்ல முடியாதவன்.
- தானன்றி வேறு இல்லை என்னும் படியானவன்
- அறிதற்கு அரியவன்
- பூமி, பதங்கள், அண்டங்கள் ஆகிய எல்லாப் பொருளுமாயத் தோன்றி விரிந்து படருகின்ற ஒளிப்பிழம்பானவன்
- ஆதியாயும் நடுவாயும் அந்தமாயும் திகழ்பவன்
- தீதிலா நன்மையைத் தரும் திருவருட் குன்றாய் விளங்குபவன்.

10 புள்ளிகள்

agaram.lk

## பகுதி – III

7. அ) புறநானூறு — திருமுருகாற்றுப்படை
பதிற்றுப்பத்து — பொருநராற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
பெரும்பாணாற்றுப்படை
கூத்தராற்றுப்படை
மதுரைக்காஞ்சி

08 x ½ = 4 புள்ளிகள்

ஆ) 1. காதலைப்பாடுபவை
2. முதல், கரு, உரிப்பயன்பாடு
3. உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் பயன்பாடு
4. அன்பினைந்திணை வெளிப்பாடு
5. கைக்கிளை, பெருந்திணை வெளிப்பாடு.
6. பெரும்பாலும் அகவற்பா கையாளப்பட்டமை.
7. ஒருவனும் ஒருத்தியும் தொடர்புற்ற பின்னணியில் அவரிருவருடைய உறவினர், சமூகம், காதல், காமம் பற்றிய பாடல்களாக அமைபவை.
8. தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலித்தாய், நற்றாய் முதலிய பாத்திரங்களின் கூற்றாக அமைதல்.
9. புலநெறி வழக்கையும் உலகியல் வழக்கையும் ஆதாரமாகக் கொண்டவை.

09 புள்ளிகள்

இ) சங்க காலத்தில் ஐவகை நிலங்களுமேற்ற போரொழுக்கங்கள் தவிர்ந்த காஞ்சித்திணை, பாடாண் திணை என்பனவும் புற ஒழுக்கங்களாகக் கொள்ளப்படுகின்றன.

- காஞ்சித்திணை – உடல், இளமை, அழகு, செல்வம் முதலியவற்றின் நிலையாமையைப் பேசுவது. இது இருவகைப்படும்.
  1. ஆண் பாற் காஞ்சி – போர்க்களத்தில் காயமுற்ற வீரன் தன் விழுப்புண்ணைக் கிழித்துக் கொண்டு இறத்தல், வடக்கிருந்து உயிர் துறத்தல் போன்றவற்றைக் கூறுவது.
  2. பெண்பாற்காஞ்சி – போர்க்களத்தில் இறந்த தனது தலைவனைப் பற்றிப்பலவாறு கூறிப்புலம்பதல், உடன் கட்டையேறுதல், உடனுயிர் நீத்தல் போன்றவற்றைப் பாடுவது.

04 புள்ளிகள்

  3. பாடாண்திணை – பாடப்படும் ஆண் மகனின் ஒழுகலாறு பற்றிக் கூறுவதாகும் மன்னனது வீரம், கொடை பற்றிப் புகழ்ந்து பாடுதல்.
  மக்களது சமய, சமூக, பொருளாதார வாழ்வைப் பாடுதல்.
  வாழ்க்கைத் தத்துவங்கள், நோக்கங்களைப் பாடுதல். 03 புள்ளிகள்

8. அ) அகநானூறு
நற்றிணை
ஐங்குறுநூறு
குறுந்தொகை
கலித்தொகை
குறிஞ்சிப்பாட்டு
முல்லைப்பாட்டு 04 புள்ளிகள்

agaram.lk

ஆ) போர், வீரம் பற்றிப் பாடுவது – பாடாண் திணை

* வெட்சி, வாஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்ற ஐந்திணை மரபு.
* நிலையாமைக் கருத்துக்கள் - காஞ்சித்திணைது
* நேரில் கண்டு பாடுதல்.
* அறிவுரை கூறுதல்
* மன்னர், வள்ளல்களை நோக்கி ஆற்றுப்படுத்தும் பண்பு.
* இரங்கிப்பாடுதல்
* உள்ளதை உள்ளவாறே பாடும் பண்பு பெரும்பாலும் புலவர் கூற்றாக அமைதல்.

09 புள்ளிகள்

இ)

❖ கைக்கிளை என்பது ஒருதலைக்காதல் ஆகும்.

1. பருவமடையாத பேதை மீது காதல் கொண்டு அவளைப் பற்றிப் பலவாறு சொல்லி இன்புறுதல்.
2. ஏறுதழுவுதல் மூலம் நிகழும் திருமணங்கள்
3. தலைவனும் தலைவியும் காதல் கொள்ளமுன் தலைவனிடத்தே தோன்றும் காட்சி, செயல், தெளிவு, தேறல்

❖ பெருந்திணை என்பது பொருந்தாகக் காமம் ஒருவன் ஒருத்தி மீது காதல் கொண்டு அவளை அடைய முடியாத பட்சத்தில் மடலேறுதல் வரைபாய்தல் முதலானவற்றை கையாளுதல்.

(3 ½ x 2 = 7 புள்ளிகள்)

agaram.lk